<u>4வது சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை- 600 104.</u>

நாள். 09.02.2026
எம்.சி.ஓ.பி எண். 513/2025
ம.சா. 1
பெயர். ஜெயகாந்தன்
த/பெ.திரு. நாரயணண்
வயது. 59

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். ம.சா.ஆ 1 முதல் 9 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>2ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த விபத்து சாலை கடக்கும்போது தான் ஏற்பட்டது என்றால் சரிதான். சாலையை கடப்பதற்கான Zebra Crossing இருந்தது. பாதசாரிகள் கடக்கூடிய இடம் என்பதனை காண்பிக்க மாதிரி வரைப்படம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அறுவை சிகிச்சை செய்யவில்லை என்றால் சரிதான். என் மனைவிக்கு இரண்டு கை கால்கள் சரிவராது அவர்களை நான் தான் கவனித்துக்கொள்கிறேன். 06.01.2025 அன்று பிறகு தொடர் சிகிச்சை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4,5,6,7,8 சொல்லியுள்ள சங்கதிகளுக்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வருமான மற்றும் வருமான இழப்பு ஆவணங்கள் தாக்கல் செய்வில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் வாகன ஓட்டிக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் பயிற்சி ஓட்டுநர் உரிமம் தான் இருந்தது என்று சொன்னால் அதை பற்றி தெரியாது. இந்த விபத்துக்கு என்னுடைய கவனக்குறைவு தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர்க்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணம் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கேட்டிருக்கும் இழப்பீடு மிகுதியானவை என்று சொன்னால் சரியல்ல.
மறுவிசாரணை இல்லை.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

ARUNDHADHI MAGESH

Digitally signed by ARUNDHADHI MAGESH